ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையில் உள்ள கொழும்பு தூதரகத்தின் அமெரிக்கப் பிரஜைகளுக்கான சேவைகள் அலகிற்கு (American Citizen Services (ACS) Unit) தங்களை வரவேற்றுக் கொள்கின்றோம். இந்த ACS அலகானது இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் வருகை தரும் மற்றும் வசிக்கும் ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகளுக்குத் தனது சேவைகளை வழங்குகின்றது.

இந்த ACS அலகானது இலங்கை மற்றும் மாலைதீவில் உள்ள அமெரிக்கர்களுக்கான பிரயாணக் கடவுச்சீட்டுகள், பிறப்பு மற்றும் மரணச் சான்றிதழ்கள் என்பவற்றை வழங்குவதுடன், பத்திரங்களுக்குச் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கும் சேவைகளையும் வழங்குகின்றது. ACS அலகானது ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் கைது செய்யப்படுதல், ஆதரவற்ற நிலையிருத்தல் போன்ற இடர்பாடுகளில் அவர்களுக்கு உதவி செய்கின்றது. இந்த அலகானது வைத்தியர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பெயர் விபரங்களை ஆலோசனைகளுக்காகப் பேணுகின்றது.

தூதரகமானது இல. 210, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரியில் அமைந்துள்ளது. அமெரிக்கப் பிரஜைகளுக்கான சேவைகள் அலகு திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் மதிய வேளைகளில் மட்டும் நியமனம் மூலம் வழக்கமான சேவைகளுக்காகத் திறந்திருக்கும். உங்களுடைய நேர்முகத்தேர்வு நியமனம் ஒன்றினை ஏற்பாடு செய்வதற்காக தயவு செய்து எமது இலத்திரனியல்வழி நேரடித்தொடர்பு மூலமான நேர்முகத்தேர்வு நியமன அமைப்பு முறைக்கு விஜயம் செய்யவும். இலத்திரனியல்வழி நேர்முகத்தேர்வு முறைக்கான இணையத் தொடர்பு.